## இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

(அ) 2012 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் பின்பற்ற வேண்டிய புதிய கணக்கீட்டு நியமங்களை கூட்டுத்தாபனம் பின்பற்றியிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டின் பெறுமதிகள், காசோட்டக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விற்பனைகள் ரூபா 172,363 ஆல் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மூலப்பொருள் கொள்வனவுச் செலவினம் ரூபா 640,809 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2012 ஆம் ஆண்டின் பொருளாதாரச் சேவைக் கட்டணச் செலவினம் ரூபா 195,596 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) நாணயக் கடிதப் பாதுகாப்பு ஆழ்நிதிக் கணக்கின் மீதி வங்கி மீதியினைக் காட்டிலும் ரூபா 9,153 ஆல் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2012 ஆம் ஆண்டின் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமானத்தேய்வு ரூபா 1,177,639 ஆன போதிலும் நிலையான சொத்துக்கள் பட்டோலை மற்றும் பெறுமானத்தேய்வுக் கணக்கு என்பவற்றில் அது ரூபா 294,555 எனக்

காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 883,084 ஆல் குறைத்தும், சொத்துக்கள் அத்தொகையால் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) ஊழியர் கடன் பெறுமதி ரூபா 16,538,848 ஊழியர் கடன் முற்பணங்களின் கீழ் காண்பிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் முற்செலுத்துகைகள் மற்றும் முற்பணங்களின் கீழ் அப் பெறுமதி காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.3 செலுத்தவேண்டிய மற்றும் பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கவேண்டிய ரூபா 67,726,193 கடன்பட்டோரில் 02 ஆண்டுகளிற்கும் மேல் பழமைவாய்ந்த கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 2,305,788 ஆகும்.

(ஆ) 2009 ஆம் ஆண்டில் வெளிநாட்டு உயர் ஸ்தானிகர் அலுவலகமொன்றிற்கு அனுப்பப்பட்ட மருந்துகளிற்காக ரூபா 193,560 கிடைக்க வேண்டியிருந்தது.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் விடயங்களிற்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| முன்னைய ஆண்டுச் சீராக்கம் | 37,299,320 | பட்டோலைகள் |
| புதிய நிர்வாகக் கட்டிடத்தின் கிரயம் | 18,699,420 | பட்டோலைகள் |
| அகற்றப்பட்ட கட்டிடத்தின் கிரயம் | 6,863,355 | பட்டோலைகள் |
| அகற்றப்பட்ட கட்டிடங்களின் பெறுமானத்தேய்வு | 4,731,531 | |
| ஆயுர்வேத திணைக்களத்திடமிருந்து கிடைக்கவேண்டிய கடன் | 1,246,419 | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் |
| தென் மாகாண ஆயுர்வேத ஆணையாளரிடமிருந்து கிடைக்கவேண்டிய கடன் | 14,407 | |
| சுதேச வைத்திய அமைச்சிடமிருந்து கிடைக்கவேண்டிய கடன் | 265,597 | |

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை.

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணங்கள் கையேடு | |
| (i) நி.பி. 169 | சகல வாடிக்கையாளருக்கும் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகளிற்காக சிட்டைகள் வழங்கப்பட வேண்டிய போதிலும், 5 விற்பனை நிலையங்களால் அவ்வாறு சிட்டைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி. 772 | பத்தரமுல்லை மற்றும் விஜேராம விற்பனை நிலையங்களில் வருடாந்த பொருள் மெய்மையாய்வினால் இனங்காணப்பட்ட பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியாத 49 மருந்துகளை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | ஒதுக்கப்பட்ட இரண்டு வாகனங்களிற்காக அங்கீகரிக்கப்பட்ட லீற்றர் அளவுக்கு மேலாக முறையே 1264 லீற்றர் மற்றும் 406 லீற்றர் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றின் பெறுமதிகள் முறையே ரூபா 106,230 மற்றும் ரூபா 55,654 ஆகக் காணப்பட்டன. |
| (இ) 2012 திசெம்பர் 24 ஆந் திகதிய 49 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | கூட்டுத்தாபன ஊழியர் ஒருவருக்குச் செலுத்தப்படக்கூடிய உபகாரப் படி ரூபா 7,500 தொகையான போதிலும், அமைச்சரவையின் முன் அங்கீகாரமின்றி ரூபா 10,000 வீதம் உபகாரச் சம்பளமாக ரூபா 2,263,166 தொகை பதவியணியினருக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் இதன் படி சுற்றறிக்கை ஏற்பாடுகளிலிருந்து விலகி ரூபா 607,500 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபன நடவடிக்கைகளின் செயற்பாட்டு விளைவு வரிக்கு முன்னர் ரூபா 67,090,055 தேறிய இலாபமாக இருந்ததுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 63,878,705 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 3,211,350 அதிகரிப்புக் காண்பிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 10,988,822 மூலப்பொருள் நன்கொடைகள் கிடைத்திருந்தமை, வருமான வரி ரூபா 12,988,460 கூடுதலாக ஒதுக்கப்பட்டமை, நிதிச் செலவினம் ரூபா 139,888 ஆல் குறைவடைந்தமை ஆகியன நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக காணப்பட்டன..

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டின் திருத்தப்பட்ட வருடாந்த உற்பத்தி திட்டத்தில் காணப்பட்ட திட்டமிடப்பட்ட உற்பத்தி ரூபா 374,149,606 ஆக காணப்பட்ட போதிலும், உள்ளபடியான வருடாந்த உற்பத்தி ரூபா 239,164,746 ஆக காணப்பட்டது. அதன்படி, வருடாந்த உற்பத்தியில் ரூபா 134,984,860 குறைவு ஏற்பட்டிருந்தது.

(ஆ) மதிப்பிடப்பட்ட உற்பத்தியினை உள்ளபடியான உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 7 உற்பத்தி விடயங்களில் சாதகமான முரண்கள் காணப்பட்டதுடன் அது 20 சதவீதம் முதல் 2842 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. 2 உற்பத்தி விடயங்களில் பாதகமான முரண்கள் காணப்பட்டதுடன் அது 11 சதவீதம் முதல் 32 சதவீதம் வரை காணப்பட்டது.

(இ) கூட்டுத்தாபனத்தின் 2012 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட விற்பனையினை உள்ளபடியான விற்பனையுடன் ஒப்பிடுகையில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடையப்பட்டிருக்காமை வெளிப்பட்டது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | மதிப்பிடப்பட்ட விற்பனை | உள்ளபடியான விற்பனை | பாதகமான முரண்கள் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| அரசாங்கத் துறை | 385,488,000 | 395,757,221 | (72,022,779) | 15 |
| தனியார் துறை | 82,292,000 | | | |
| ஒட்டுமொத்த விற்பனை | 467,780,000 | 395,757,221 | (72,022,779) | 15 |

அரசாங்கத்துறை மற்றும் தனியார் துறைக்கு மேற்கொள்ளப்பட்ட விற்பனைகளை வெவ்வேறாக சமர்ப்பித்திருக்காமை காரணமாக அப்பிரிவுகளின் செயன்முன்னேற்றத்தை வெவ்வேறாக பகுப்பாய்வு செய்வதற்கு முடியாதிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் வருடாந்த விற்பனையைக் கருத்திற்கொள்கையில் கிவாலு, வடிகா, குகுல் மற்றும் கல்க போன்ற மருந்துகளின் விற்பனையில் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| உற்பத்தியின் பெயர் | விற்பனைகள் | விற்பனைகள் | வேறுபாடு |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | அலகுகள் | அலகுகள் | |
| கிவாலு 750 மி.லீ. (போத்தல்) | 65,811 | 84,240 | (18,429) |
| வடிகா மற்றும் குகுல் (பக்கட்) | 57,856 | 61,000 | (3,144) |
| கல்க (பக்கட்) | 65,150 | 81,526 | (16,376) |

## (உ) நிகவெரட்டி ரந்தெனிகம மூலிகைத் தோட்டம்

2005 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்ட 54 ஏக்கர்கள் கொண்ட நிகவெரட்டி மூலிகைத் தோட்டத்தின் பரிசீலனையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) காணிக்குரிய அளவைத்திட்டம் கூட்டுத்தாபனத்திடம் காணப்படவில்லை.

(ii) ஒவ்வோர் ஆண்டிலும் வருமானத்தை மிகைத்து செலவுகள் செய்யப்பட்டிருந்ததுடன் கடந்த 03 ஆண்டுகளில் ரூபா 3,513,844 தொகை அவ்வாறு வருமானத்தை மிகைத்து செலவிடப்பட்டிருந்தது.

(iii) 2010 ஆம் ஆண்டில் 13 மருந்து வகைகளும் 2011 ஆம் ஆண்டில் 28 மருந்து வகைகளும் 2012 ஆம் ஆண்டில் 48 மருந்து வகைகளும் நிகவெரடிய மூலிகைத் தோட்டத்திலிருந்து கிடைத்திருந்தன. கிடைத்திருந்த மருந்து வகைகளில் அனேகமானவை மூலிகைத் தோட்டத்தில் காணப்படுகின்ற நிரந்தர செடிகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மருந்து (உதாரணமாக வேம்பு, ஆடதோடை, மதுருதலா, வல்கெப்படியா) வகைகளாக காணப்பட்டதுடன் குறுங்கால பயிர்ச்செய்கையின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய மருந்துகள் (உதாரணமாக லுனுவில, மஞ்சள், கற்றாளை, பாகற்காய்) போதியளவில் வழங்குதல் அல்லது பயிரிடல் இடம்பெற்றிருக்கவில்லை.

(iv) பூங்காவிற்கென மருந்து பயிரிடல் திட்டமொன்று காணப்படவில்லை. பயிர்ச்செய்கை நிலத்தில் பல்வேறு மூலிகைச் செடிகள் பயிரிடப்பட்டிருந்த போதிலும், அது முறைப்படி இடம்பெற்றிருக்கவில்லை.

(V) நீண்டகாலமற்ற மருந்துகள் பயிரிடப்பட்டிருந்ததுடன் அவைகளும் மிகச் சொற்ப அளவில் ஆங்காங்கே பயிரிடப்பட்டிருந்தன. (உதாரணமாக தூதுவளை, கற்றாளை)

(vi) மருந்துச் செடிகள் தொடர்பில் போதியளவு அறிவு நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடம் காணப்படாதிருந்ததுடன், சிலவகையான மூலிகைகள் அவரால் இனங்கண்டு கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vii) எளிதில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆடதோடை (பச்சை) நிக இலை (பச்சை) வேப்பிலை (பச்சை) போன்ற மருந்துகள் மாத்திரம் 500 கிலோவிற்கும் அதிகமாக ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப் பட்டிருந்ததுடன் அனேகமான மருந்து வகைகளில் ஒரு மருந்து வகையில் 10 கிலோகிராமிற்கும் 100 கிலோகிராமிற்கும் இடைப்பட்ட அளவிலேயே ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. (ஆனேகமான மருந்து வகைகளில் 50 கிலோகிராமிற்கும் குறைவாகவே வழங்கப்பட்டிருந்தன.)

(viii) மூலிகைத் தோட்டத்தில் பெறுமதிமிக்க மருந்துச் செடிகள் காணப்பட்டதுடன் அந்த இடங்கள் இனங்காணப்பட்டு பெயரிடப் படாதிருந்தமையால் நிரந்த மூலிகைச் செடிகள் (உதாரணமாக சந்தணம், செஞ்சந்தணம்) பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கிக் கணக்குகள் தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்பட்டன.

(i) 15 ஆண்டுகளிற்கும் மேல் பழமைவாய்ந்த இதுவரை இனங்காணப்படாது வங்கிக்கு செலவுவைக்கப்படாதுள்ள ரூபா 224,168 பெறுமதியான காசோலைகள் தொடர்பில் 2013 நவம்பர் 04 ஆந் திகதி வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 20 ஆண்டுகளிற்கும் மேலாக நிலவிவருகின்ற தீர்க்கப்படாதுள்ள ரூபா 337,010 பெறுமதியான இனங்காணப்படாத மீதிகளை தீர்ப்பதற்கு 2013 நவம்பர் 04 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள் வருமான உத்தரவுப் பத்திரம் மற்றும் காப்புறுதிச் சான்றிதழ் இன்றி பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 4 மூலிகைத் தோட்டங்களிலுள்ள பெறுமதியான மருந்துச் செடிகள் மற்றும் பெறுமதியான மர வகைகள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பத்தரமுல்லை, பரீட்சைகள் திணைக்கள விற்பனை நிலையம், புறக்கோட்டை விற்பனை நிலையம், விஜயராம விற்பனை நிலையம், மக்கள் கலைகள் மன்ற மற்றும் செத்சிரிபாய விற்பனை நிலையம் என்பவற்றின் பௌதீகச் செவ்வையில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்பட்டன.

(i) விற்பனைசெய்ய முடியுமானதும் நுகர்வோர் கேள்வி காணப்படுவதுமான அனேக மருந்து வகைகள் பற்றாக்குறையாக காணப்பட்டமை. (உதாரணமாக ரணஹங்ச இரசாயணம், தேன், நன்னாரி தேயிலை பை, மதுகா பாணி, திரிபலா மாத்திரை)

(ii) மருந்து விற்பனை நிலையங்களிற்கு 2012 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த விற்பனை இலக்குகள் அடையப்பட்டிருக்காமை.

(iii) அனேக விற்பனை நிலையங்கள் மருந்துகள் மற்றும் கஞ்சிகளின் பெறுவனவு மற்றும் வழங்கல்கள் பதிவேட்டினை முறைப்படியாக பேணியிருக்காமை, கஞ்சி விற்பனைக்காக சிட்டையிடல் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்காமை மற்றும் கஞ்சியின் அளவு கணிப்பிடப்படாது வழங்கப்பட்டிருந்தமை.

(iv) காலங்கடந்த மருந்துகள் காணப்பட்டமை மற்றும் காலாவதியாகும் திகதி பிழையாக அச்சிடப்பட்டிருந்தமை.

(v) 2012 ஆகஸ்ட் மாதம் முதல் விலைகளில் திருத்தங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் விற்பனை நிலையங்கள் அறிவுறுத்தப்பட்டிருக்காமை மற்றும் சுற்றுத்துண்டுகளில் விலைகளைத் திருத்தும் முறையொன்று தயாரிக்கப்பட்டிருக்காமை.

(vi) கூட்டுத்தாபனத்தில் கூடுதலாக விற்பனை இடம்பெறுகின்ற நிலையங்களின் விற்பனையை அதிகரிப்பதற்கும், நட்டத்தில் இயங்கிவருகின்ற நிலையங்களின் நட்டத்தினைக் குறைப்பதற்கும்

தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையொன்றை பலப்படுத்தியிருக்காமை.

(vii) 2009 செப்தெம்பர் 25 ஆந் திகதி விற்பனை நிலையங்கள் செயற்படுகின்றமை தொடர்பில் நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பரிந்துரைகளை செயற்படுத்தியிருக்காமை.

(viii) மருந்துகளின் விற்பனையின் போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கழிவு முறையில் குறைபாடுகள் காணப்படுகின்றமை.

(ஆ) 2012 இன் முதலாம் காலாண்டில் மூலப்பொருள் பற்றாக்குறை காரணமாக 29 வேலை அட்டைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

## 3.4 சச்சரவுத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தனியார் நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 194,006 பொருட்களிற்காக அந்நிறுவனத்திற்கு கொடுப்பனவை மேற்கொள்ளாது கூட்டுத்தாபன முகாமைத்துவப் பணிப்பாளரின் எழுத்துமூல பணிப்புரையின் கீழ் ஆளொருவரின் பெயரிற்கு காசோலை வழங்கப்பட்டு அக்காசோலை அவரால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் மருந்துகளைக் கொள்வனவு செய்யும் மருத்துவச் சபையினதும் ஆய்வுகூடத்தினதும் பரிந்துரையினால் தள்ளுபடி செய்யப்பட்டிருந்த 4000 கி.கி. தேன் ஒரு கிலோகிராம் ரூபா 495 வீதம் ரூபா 1,980,000 பெறுமதிக்கு தனியார் நிறுவனமொன்றிடமிருந்து 2012 யூன் 08 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.5 பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உரிய பேணுகை மற்றும் திருத்தங்கள் செய்யப்படாது நிகவரெடிய பூங்கா வளவில் சொத்துக்கள் துருப்பிடிக்கும் நிலையில் வைத்திருக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2011 திசெம்பர் 31 இன் பொருள் மெய்மையாய்வில் இனங்காணப்பட்டிருந்த பாவனைக்கு எடுக்கப்படாத 248 பொருள் விடயங்கள் காணப்பட்டதுடன் அவற்றைத் திருத்தி பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 இனங்காணப்பட்ட இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொள்வனவு செய்யப்பட்டிருந்த போத்தல்கள் கழுவப்பட்டிருக்காமையால் கூட்டுத்தாபன வளவில் காணப்படுகின்ற 25000 போத்தல்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியாதவையாக அகற்றவேண்டியேற்பட்டிருந்தது. அப்போத்தல்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த அண்ணளவான பெறுமதி ரூபா 250,000 ஆகும்.

(ஆ) செத்சிரிபாய அலுவலகத் தொகுதியிலுள்ள 04 ஆம் இலக்க சிற்றுண்டிச் சாலையினை நடாத்திச் செல்வதற்காக வாடகையினைச் செலுத்துதல் தாமதிக்கப்பட்டிருந்தமை காரணமாக ரூபா 5,000 மிகை விதிப்பினைச் செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

(இ) 01283115 ஆம் இலக்க வேலை அட்டையின் கீழ் மதுகா இருமல் பாணியை உற்பத்தி செய்கையில் இடம்பெற்றிருந்த ஊழிய வினைத்திறனின்மையால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 233,400 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஈ) 009967 மற்றும் 009979 ஆம் இலக்க வேலை அட்டைகளின் கீழ் உற்பத்தி செய்யப்பட்டிருந்த தாரணி பாணிப் போத்தல்களில் துர்நாற்றம் வீசியமை காரணமாக விற்பனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த மருந்துகளின் பெறுமதி ரூபா 65,720 ஆகும்.

## 3.7 தாமதமடைந்த செயற்திட்டங்கள்

ரஜரட உற்பத்திப் பிரிவின் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு இடைப்போக்கில் நிறுத்தப்பட்டிருந்தது. அதற்காக 2010 ஆம் ஆண்டில் ரூபா 1,775,095 செலவிடப்பட்டிருந்தது.

### 3.8 ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

2012 ஒக்தோபர் 12 ஆந் திகதிய 226/10/2012 ஆம் இலக்க கொடுப்பனவு உறுதிச்சிட்டையால் சுதேச வைத்திய அமைச்சிற்காக புதுடில்லி நகரத்தில் உலக சுகாதார அமைப்பின் அலுவலகமொன்றைத் தொடங்குவதற்கு ரூபா 3,000,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. அதன் செயன்முன்னேற்றம் தொடர்பில் எவ்வித எழுத்துமூல சான்றுகளும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தினால் 2013 யூன் 19 ஆந் திகதியன்றே நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இதன்படி நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தலின் மீதான தாமதம் 03 மாதங்களாக காணப்பட்டது.

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2012 ஆம் ஆண்டிற்குரிய கூட்டுத்தாபனத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய தயாரிக்கப்பட்ட செயன்முன்னேற்றத்தைக் காண்பிக்கும் அறிக்கை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படாதிருந்தமையால் செயன்நடவடிக்கைத் திட்டத்திலும் கூட்டிணைந்த திட்டத்திலும் காண்பிக்கப்பட்டிருந்த இலக்குகள் அடையப்பட்டிருந்த அளவுகளை மதிப்பீடுசெய்ய முடியவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(அ) களஞ்சியப்படுத்தல் மற்றும் இருப்புக் கட்டுப்பாடு

(ஆ) கிரயமிடல்

(இ) ஊக்குவிப்புப் படி

(ஈ) கணக்கீடு – மென்பொருள் பாவனை

(உ) விற்பனைகள் - விற்பனை நிலையங்களின் விற்பனைகள்

(ஊ) வாகனங்கள்